

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (21.01.2025) மாலை, சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் நடைபெற்ற ‘சிவகங்கை மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு’ நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

### காரைக்குடியில் — அரசு

# ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

## “மாணவிகள் நன்றாகப் படித்து – வாழ்வில் சிறப்பான நிலையினை அடைய வேண்டும்” என்று வாழ்த்தினார்!

காரைக்குடி, ஜன.22-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வியறிவு மற்றும் சமூகபொருளாதார நிலையினை உயர்த்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும் வகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள் மற்றும் விடுதிகளை கட்டுதல், அம்மாணவ, மாணவியர்களுக்கு பல்வேறு கல்வி உதவித் தொகைகள் மற்றும் கட்டணச் சலுகைகள் வழங்குதல், இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின குடியிருப்புகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அம்மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்குதல், சுய தொழில் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்கிட பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், காரைக்குடி, முடியரசன் சாலையிலுள்ள அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று மாலை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இவ்விடுதியில் 62 பள்ளி மாணவிகள் தங்கியுள்ளனர்.

முதலமைச்சர் அவர்கள், அம்மாணவிகளிடம் விடுதியில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், விடுதியில் உள்ள வசதிகள் குறித்தும், அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், அம்மாணவிகளை நன்றாக படித்து, வாழ்வில் சிறப்பான நிலையினை அடைய வேண்டும் என்று வாழ்த்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.1.2025) காரைக்குடி, அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, மாணவிகளிடம் விடுதியில் வழங்கப்படும் உணவின் தரம் குறித்தும், விடுதியில் உள்ள வசதிகள் குறித்தும், அவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, விடுதியில் உள்ள சமையல் கூடம், உணவுக் கூடம், இருப்பு அறை ஆகியவற்றை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மாணவிகளுக்கு இரவு உணவாக வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட இட்லி, சாம்பார், சட்னி ஆகியவற்றை ருசித்து பார்த்து அதன் தரத்தினை ஆய்வு செய்தார்.

பின்னர், விடுதி அலுவலர்களிடம், மாணவிகளுக்கு தரமான மற்றும் சத்தான உணவினை குறித்த நேரத்தில் தவறாமல் வழங்கிட வேண்டும் என்றும், அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். மேலும், மாலை நேரங்களில் மாணவிகளுக்கு விடுதி காப்பாளர்கள் பாடங்கள் கற்றுத் தருவது பாராட்டுக்குரியது என்றும், பள்ளி பாடத்துடன் பொது அறிவு தகவல்களையும் மாணவிகளுக்கு கற்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.1.2025) காரைக்குடி, அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்த போது, மாணவிகளுக்கு இரவு உணவு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்ட இட்லி, சாம்பார், சட்னி ஆகியவற்றை ருசிபார்த்து அதன் தரத்தினை ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், க.பாலாஜி தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில், மனிதநேய உதயநாளை முன்னிட்டு – மாபெரும் கோலப்போட்டி நடைபெற்றது. இதில் கழக மகளிர் அணிச் செயலாளர் திருமதி.ஹெலன் டேவிட்சன், மேயர் பிரியா ராஜன் ஆகியோர் கோலப்போட்டியில் வென்ற 300 மங்கையர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர்.

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில்

# சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் கோலப்போட்டி!

## திருமதி. ஹெலன் டேவிட்சன் – மேயர் ஆர்.பிரியா ராஜன் பரிசு வழங்கினர்!

சென்னை, ஜன.22-

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில், க. பாலாஜி- தலைமையில், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில், மனித நேய உதயநாளை முன்னிட்டு - மாபெரும் கோலப் போட்டி - கழக மகளிர் அணிச் செயலாளர் திருமதி. ஹெலன் டேவிட்சன், மேயர் பிரியா ராஜன் ஆகியோர் கோலப்போட்டியில் வென்ற 300 மங்கையர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் மனித நேய உதயநாளை முன்னிட்டு உதயம் 24, பெண்களிடும் கோலம் அழகானது, மண் முழுவதும் உதயம் நமக்கானது எனும் தலைப்பில் 300 மங்கையர்கள் பங்கு பெறும் மாபெரும் கோலப்போட்டி நிகழ்ச்சி 21.1.2025 செவ்வாய்கிழமை அன்று மாலை 04.00 மணியளவில், சென்னை, ஏழுகிணறு தெரு அம்மன் கோயில் தெருவில் நடைபெற்றது.

இக்கோலப்போட்டியில் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் க. பாலாஜி தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, முன்னிலையில் எஸ். இராஜசேகர், எஸ்.முரளி, எம்.விஜயகுமார், இரா. நரேந்திரன், ஜி.எம்.தேவன், ப.ஸ்ரீராமுலு எம்.சி, இசட். ஆசாத் எம்.சி, எல்.நவீன் எம்.சி, வெ.பரிமளம் எம்.சி, ராஜேஷ்ஜெயின் எம்.சி, என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பா.ஜெகதீஷ், எம். இப்ராஹிம்கனி, இரா. கலைச்செல்வி, ப.விஜயகுமார், எம். வினாயகம், பா.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், சி.மகேஷ்குமார் ஆகியோர் வரவேற்றனர்.

இம்மாபெரும் கோலப் போட்டியில் 300 மங்கையர்களுக்கு, கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன், மேயர் பிரியா ராஜன் ஆகியோர் பரிசுகள் வழங்கிசிறப்புரையாற்றினர்.

மேலும், இவ்விழாவில் சுதா தீனதயாளன் எம்.சி, ராஜேஷ்வரி ஸ்ரீதர் எம்.சி, கா.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெயராமன், மே.ஜெனார்த்தன், கே.ஆர். அபரஞ்சி,

வட்ட கழக செயலாளர்கள் பி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா. பார்த்திபன், க.கவியரசு, மா.ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராம மூர்த்தி, பா.அண்ணாதுரை, வி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் முருகன், அ.சுமன் ராஜ், பா.செந்தில் குமார், எஸ்.இம்ராம்கான், பி. பிலிப்ஸ், பி.விஷ்ணுசக்கரவர்த்தி, அ.திருப்பதி, நா. மோகன், அ.ஆனந்த், எம். சண்முகசுந்தரன் மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

வட்ட கழக செயலாளர்கள் எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ. அஸ்லாம் ஆகியோர் நன்றி கூறினார்கள்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் ஒன்றியம், சாலவாக்கம் அடுத்த அரும்புலியூர் ஊராட்சி கரும்பாக்கம் கிராமத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை ஆர்.காந்தி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி. வெ. கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்கினர். அருகில் கலெக்டர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் எம்பி ஜி. செல்வம் ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் வசந்தி குமார், அரும்பொலியூர் ஊராட்சி மன்ற தலைவர் வெங்கட்ராமன், அறநிலையத்துறை குழு உறுப்பினர் எஸ்.ஆர்.வெங்கடேசன், அவைத் தலைவர் என்.எஸ்.ரவி, பொருளாளர் பாலமுருகன், மாவட்ட கவுன்சிலர் சிவராமன், கிளைச் செயலாளர் கோவிந்தராஜ், விஷ்ணு, முரளி ஜெயபூரி, ஊராட்சி மன்ற தலைவர்கள் சுந்தரமூர்த்தி, கோதண்டராமன், சரவணன், மஞ்சுளா மோகன், தர்மராஜ் ஆகியோர் உள்ளனர்.